DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 383/2020** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.கிருஷ்ணமூர்த்தி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | :19.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19 th **June** 2026.

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தல் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் அய்யாபுரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது, கடந்த 17.12.2019 ம் தேதி 14.00 மணிக்கு காவல்நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசன் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாயமலை

பச்சேரி தெற்கு தெருவை சார்ந்த வேல்சாமி என்பர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காவல்நிலையக்குற்ற எண்.92/2019 ச/பி.294(பி), 323, 324, இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் யோபுசம்பத் ராஜான் அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் யோபுசம்பத் ராஜான் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் இன்டிமேசனை மருத்துவமனை சென்று தான் பெற்றேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பதிவு செய்ததும் நான்தான், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் நான்தான் என்றால் சரிதான். நான் இன்டிமேசன், விபத்து பதிவேடு ஆகியவற்றை பார்த்து அ.சா.1–க்கு ஏற்பட்ட காயத்தை குறித்துகொண்டேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் பதிவு செய்த கையெழுத்து என் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்று துலங்குமா என்றால் துலங்காது. காவல் நிலை ஆணைகளின் படி(PSO) புகார்வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, இன்டிசேமசன் ஆகிய 3 ஆவணங்களையும் இணைத்து தான் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 20.12.2019 அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஏற்கனவே அ.சா.1–யிடம் புகார் வாக்குமூலம் பெற்று அந்த

புகார் வாக்குமூலம் அரசு தரப்பிற்கு எதிராக அமைந்ததால் அந்த புகார் வாக்குமூலத்தை மறைத்து இந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்க சென்று மருத்துவமனையில் இருந்த இன்டிமேசன், விபத்து பதிவெடு ஆகியவற்றை பெற்று அ.சா.1–யிடம் எழுதாக வெள்ளைப்பெப்பரில் கையொப்பம் பெற்றுக்கொண்டு பின்னிட்டு புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் புகார் வாக்குமூலம் நான் பெறவில்லை என்றாலும், அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்பைடயில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அ.சா.1 அளித்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.